"இலஞ்ச, ஊழல் அற்ற வளமான இலங்கை"

உயிரைப் பிடுங்கும்
வைரஸ் அரக்கன்
ஊடுருவும் மண்ணிலே!
வெயிலிற் பட்ட
புழுவைப் போல
வெந்து விடும் தன்னிலே!

இதனை விடவும்
கொடூரம் உண்டெனில்
இலஞ்சம் என்பது உண்மையே!
அதனைத் துறந்து
அனைவரும் முயல்வோம்
அதனால் உண்டு நன்மையே!

நாட்டை நரகம்
ஆக்கும் நிலையினை
மாற்ற வேண்டும் வேகமா
தேட்டம் தாண்டி
சீழைக் குடித்தல்
தேசத்துக்கு ஆகுமா?

வேதனம் உந்தன்
வேலைக்கு கிட்டும்
வேண்டுமா உனக்கு இலஞ்சமே!
வேதனைப் பட்டு
வெந்திட நேரும்
வேடிக்கை நீக்கு நெஞ்சமே!

பணத்தைத் தின்றிடும்
பிசாசு பேயை
நாட்டை விட்டு ஓட்டுவோம்!
பிணத்தைக் கூட
விடுவார் இல்லை
போக்கிரித் தனத்தை மாற்றுவோம்!

பொருளைக் கொடுத்து
சுயநலம் வெல்லும்
பூதத்தை நாம் கொல்லுவோம்!

அருள் மிகும் ~~தேசம்~~ பாசம்
அன்னை நம் தேசம்
அகிலத்தில் சிறந்தே வெல்லுவோம்!

இலங்கை தேசம்
இலங்கிட நாமும்
இலட்சியப் பூட்கை கொள்ளுவோம்!
கலங்கரை போலே
விளங்கிடும் தாயான்
கருணைப் பாதை செல்லுவோம்.!